# கனடா – காரை கலாச்சார மன்றம்
# Canada - Karai Cultural Association

A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492

PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912

E-mail: karainagar@gmail.com www.karainagar.com



**President**
Mr.Paramanantharajah Thambiayah
(416) 642 4912 / (416) 400 3198

**Secretary**
Mr.Jeyachandran Thambirajah
(416) 642 4912 / (647) 867 5392

**Assistant Secretary**
Mr.P.Theesan Thiravianathan

**Treasurer**
Mr. Perinparajah Thirunavukarasu
(416) 642 4912 / (416) 258 5365

**Assistant Treasurer**
Mr.Umaipakan Kanagendram

**Committee Members:**
Mr.Kumaresan Kanagasabai
Mr.Ari Manoharan
Mr.Uruthiralingam Thambiah
Mr.Sothilingam Ganeshapillai

**Patron Committee**
Mr.Kanagarajah Kandiah

**Auditor**
Mr.Sivaramalingam Sivasubramaniam


திரு. இராசதுரை ரவீந்திரன்
முன்னாள் தலைவர், கனடா காரை கலாச்சார மன்றம்

அன்புடையீர்,

கனடா காரை கலாச்சார மன்றத்தின் தற்போதைய நிர்வாகம் நடைமுறை வங்கி கணக்கு இன்றி தற்பொழுது இயங்கி வருகின்றது அறியத்தக்கது. கடந்த நிர்வாக சபையினை தலைமையேற்று நிர்வகித்து வந்ததுடன், மன்றத்தின் வங்கி கணக்கிற்கு கையொப்பம் இடுவதற்கு தகுதி வாய்ந்தவர்களில் ஒருவரான தாங்கள் இதுவரை வங்கி கணக்கினை முறையே தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளிக்க தவறியுள்ளீர்கள்.

தங்களதும் தங்கள் நிர்வாக சபையின் செயலாளராக பதவி வகித்த திரு.கணேசன் பாலசுப்பிரமணியம் மற்றும் பொருளாளராக பதவி வகித்த திரு.பரமசிவம் தர்மலிங்கம் ஆகியோரது கையொப்பம் இன்றி வங்கி கணக்கினை தற்போதைய நிர்வாக சபையினர் நடைமுறைப்படுத்த முடியாதளவில் தங்களால் வங்கிக்கு தடைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல மாதகாலமாக வங்கிக் கணக்கினை தங்களிடம் இருந்து சுமூகமாக பெற்றுக்கொள்ள எடுத்த நடவடிக்கைகள் எவையும் பலனளிக்காத நிலையில் மன்றத்தின் அங்கத்தவர்களிடமும், மன்றத்தின் அனுசரணையாளர்களிடமும் தற்போதைய நிர்வாக சபையினர் கருத்துக்களை பெற்றுக்கொள்ளவும், சம்பந்தப்பட்ட தங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தங்களிற்கு முறையே மன்றத்தின் ஊடாக இமெயில்கள் வாயிலாக அனுப்பப்பட்ட கடிதங்களிற்கு பதிலளிக்க தவறிய நிலையிலும், அங்கத்தவர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் கலந்து கொண்டு 04.03.2017 அன்று நடாத்தப்பட்ட கருத்து பரிமாற்றத்தின் போதும் தாங்கள் கலந்து கொள்ள தவறிய நிலையில் இறுதி முயற்சியாக இக்கடிதம் தங்களிற்கு அனுப்பப்படுகின்றது.

மன்றத்தின் நல்லெண்ணம், தங்களின் கடந்த கால தலைமைப்பதவி என்பவற்றை கருத்திற்கொண்டு எவ்வித நிபந்தனைகளும் அற்ற வகையில் உடனடியாக மன்றத்தின் நடைமுறை வங்கிக்கணக்கினை தற்போதைய நிர்வாக சபையினர் நடைமுறைப்படுத்தும் வகையில் தங்களது நிர்வாக சபையில் கையொப்பம் இட தகுதி வாய்ந்த அனைவரது ஒத்துழைப்பினையும் பெற்று மன்றத்தின் வங்கிக் கணக்கினை தற்போதைய நிர்வாகத்திடம் கையளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.